விலை ரூபா 10.00

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

வைகாசி 2001 இதழ் -26

"அக்கினி சுவாலையால
எங்கள தீய்ச்சுப்
போடலாமென்டு கனவு
கண்டவங்கள் இப்ப
சமாதானத்துக்குக்
கேக்குறாங்கள். இதுக்கும்
பிறகு இவையோட என்ன
சமாதானம்"

-சனத்தின் குரல்-

## பேச்சுவார்த்தைக்கான சூழலை ஏற்படுத்துதல்:

# சிங்கள அரசே பொறுப்பாளி

"சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் சரியான தடத்தில் சென்று கொண்டிருக்கின்றன என்பதை என்னால் உறுதிப்படுத்த முடியும்" கதிர்காமரின் இக்கூற்று எவ்வளவு மோசடியானது. சர்வதேச விவகார விற்பன்னரின் புரட்டல் மிக்க அவசர அறிக்கைகளின் பின்னணி யாது? இன்னமும் சமாதானத்திற்கும் அதனை அடைவதற்கான அரசியல் பேச்சுக்களுக்கும் தாம் பூரண தயார் என எல்லோரையும் நம்பச் செய்வதற்கா?

தினமும் கட்டவிழ்த்து விடப்படும் ஆயுதப்படைகளின் அடக்குமுறைகள். நமது மக்களின் வெகுசனப் போராட்டங்களை நசுக்குவதற்கு மேற்கொள்ளும் அரச பயங்கரவாத நடவடிக்கைகள். இன்னமும் நமது தேசிய விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாமென்பதாகத் தொடரும் பொய்ப் பிரச்சாரங்கள். சமத்துவமாகவும் அருகருகே அமர்ந்தும் பேச்சுவார்த்தைகளை நடாத்த வேண்டிய விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாக பிரகடனம் செய்து தடைவிதிக்க வேண்டும் என வல்லரசுகளிடம் அழுத்தம். அனைத்து மக்களையும் பட்டினியில் வாட்டி வாங்கிக் குவிக்கும் போர்க் கருவிகள். அவற்றைக் கொண்டு நமது மக்கள் மீது மேற்கொள்ளப்படும் அழித்தொழிப்புத் தாக்குதல்கள். தமிழீழ பிரஜைகள் மீதும் அவர்களது உடமைகள் மீதும் விமானக்குண்டு வீச்சுக்கள். உணவு, மருந்துகள் தொடக்கம் அத்தியாவசியப் பொருட்கள் மீது தடைகளை விதித்து மேற்கொள்ளும் கூட்டுத் தண்டனைகள். ஈழத்தமிழரின் அபிலாசைகளை கைக்கூலிகளைக் கொண்டு கொச்சப்படுத்த விளையும் 'வங்குரோத்து வேலைகள்.

இவற்றை ஒன்று தவறாது செய்து கொண்டு, மேற்படி அறிக்கைகளை எப்படி இவர்களால் விட முடிகின்றது?

மூன்றே சரத்துகள் கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை, அதிலும் கணிசமான அளவிற்கு நமது தேசத்திற்கு பாதகமாக அமைகின்ற உடன்படிக்கையை ஒரு வருடத்திற்கும் மேலாக அரசு இழுத்தடிப்புச் செய்கின்றது. உடன்படுவது போலக் காட்டிக்கொண்டு அவ்வறிக்கையின்

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

## மாவனல்லை வன்முறைகள்:

# சிங்கள இனவெறியின் விரிவாக்கம்

மாவனல்லையில் முஸ்லிம் மக்கள் மீது சிங்கள இனவெறி திட்டமிட்டு, ஒழுங்கமைக்கப்பட்டுக்கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. முஸ்லிம் மக்கள் மீது வன்முறைகளை மேற்கொள்வதற்கு சிங்கள பொலிசார் வழமைபோல் காடையர்களுக்கு ஒத்துழைப்புவழங்கி நின்றனர். ஆனால் சிங்கள அரச ஊடகங்களும்அரசியல்பிரமுகர்களும்ஏதோ முஸ்லிம்களால்சிங்களவர்கள்பாதிக்கப்பட்டதைப்போலக் கோரிக்கை விட்டுக் கொண்டிருந்தனர். இது முஸ்லிம்கள் மீதான சிங்கள இனவெறிக்கு மேலும் தூபமிடுவதாக அமைகிறது.

முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்டிருக்கும் இவ்வட்டுழியங்களுக்கு அரசுத் தலைவியும் அரசியல் வாதிகளும்பல்வேறு காரணங்களையும்கூறி திசைதிருப்ப முயன்றனர். இவர்கள் அனைவரும் ஒருமித்து, இவ் வன்முறைகளுக்கு பின்னால்பொதிந்திருக்கும்முஸ்லிம்களுக்கெதிராக வளர்ந்துவரும் சிங்கள இனவெறியின் குரூரத்தை உலகின் கண்களுக்கு மறைத்துவிட முயல்கின்றனர். அதுமாத்திரமல்ல, முஸ்லிம்களுக்கெதிரான சிங்கள இனவெறியை மேலும் ஊக்குவிக்கும்வகையில் சிங்கள தலைமை தெளிவாகச்செயற்பட்டும்வருகிறது.

காலங்காலமாக இனவாதத்தில் ஊறி இறுகிவிட்ட சிங்களமனக்கட்டமைப்பானது, இதர சமூகங்களின்மீதான சகிப்புத்தன்மையை தன்னளவில் இழந்துநிற்கின்றது. மரம் கொடி என்றமனோபாவமும், ஆபத்தாக புனையப்பட்டுள்ள வரலாறும், ஐதீகங்களும், சித்தாந்த ஆதிக்கமும் சிங்கள தேசத்தின்மனங்களில்இறுகக்குடிகொண்டுவிட்டது. இந்த ஆதிக்க மனோபாவம் இன்று பரந்து வியாபித்து ஆழ வேரூன்றிவிட்டது. இந்த உண்மைகளை, மூலாதாரப் பிரச்சைனையை எவரும் ஆணித்தரமாகப்பேசவில்லை. கோரிக்கைகளினாலும் வினயமான வேண்டுகோள்களினாலும்சாந்தப்படுத்தும்முயற்சிகளினாலும்இந்த ஆபத்தான சிங்கள இனவாத நோய்க்குப் பரிகாரம் காண முடியாது. புத்தளம், காலி, பேருவல, கலகெதர, மாவனல்லை, மூதூர் இப்படிசிங்கள இனவன்முறை தொடர்வதற்குக்காரணமான மூலவேர் முற்றாக நறுக்கப்படுவதேஅடிப்படையாகச்செய்ய வேண்டியகாரியமாகும்.

தமக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்காகவும், இனியும் இவ்வாறு ஏற்படாதிருக்கவும் அழுத்தம் கொடுக்கும் நோக்குடன் கொழும்பிலும், ஏன் தீவு முழுவதிலும் பரந்து கிடக்கும் முஸ்லீம் மக்கள் மேற்கொண்ட கண்டன

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## படையினர் இழைக்கும் குற்றங்களுக்கு இடமாற்றம் ஒரு தண்டனையா?



ஒரு அரசானது பிரதானமாக அடக்குமுறை நோக்கங்களுக்காகவும், தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் ஆயுதப்படையினரை பயன்படுத்துகின்றது. இவ்வாறுபடைகள் செயற்படும் போது, மக்கள் மீது குற்றமிழைக்கும் அப்படையினரை குறிப்பிட்ட அரசானது உண்மையில் தண்டிக்குமா? அப்படித் தண்டிப்பதில்லை மாறாக, மக்கள் மீது குற்றமிழைக்கும்படையினரை அரசுபாதுகாக்கின்றது என்பதுதான் யதார்த்தமாகும்.

சிறிலங்கா ஆக்கிரமிப்பு அரசு நமது மண்ணில் படையினரை ஒன்றுகுவித்து வைத்திருப்பதில் அவர்களுக்குப் பல சலுகைகளை வழங்கி வருகின்றது. இப்படையினர் தமிழீழத்தில் எண்ணிலடங்கா வன்முறைளில் ஈடுபடுகின்றனர். குற்றச்செயல்களை செய்கின்றனர். அரசானது இவ்வாறு செய்வதற்கு தூண்டுவதோடு ஊக்கப்படுத்தியும் வருகின்றது. அதாவது, குற்றமிழைத்ததாக காணப்படும்படையினருக்கு இடமாற்றம் வழங்குவதை ஒரு தண்டனையாக அரசு பிரமாதப்படுத்தப்படுகின்றது. இத்தண்டனை முறையானது உண்மையில் தண்டனை என்பதை விட அவர்களுக்கான ஊக்கப்படுத்தலாகவே இருக்கின்றது. சம்பந்தப்பட்டவர்களை மாத்திரம் அல்ல, மற்றப்படையினரையும் இலகுவாக குற்றமிழைக்க தூண்டுவதாகவே இத்தண்டனை முறை அமைகின்றது.

இதைவிட இன்னுமொரு போக்கையும் நாம் காண்கின்றோம். அதாவது யுத்த முனைக்கு செல்ல விரும்பாத படையினரும், உயிராபத்து அதிகமான யுத்தமுனையிலிருந்து வேறு இடங்களுக்கு செல்ல விரும்பும் படைகளும் மக்கள் மீதான வன்முறைச் சம்பவங்களில் திட்டமிட்டு ஈடுபடுவதும் வழமையாகி வருகின்றது. இவர்களுக்கு உயர்ந்தபட்ச தண்டனையாக வழங்கப்படுவது வெறும் இடமாற்றம் மட்டுமே என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். அண்மைக்காலங்களில் இடம்பெற்ற ஓட்டமாவடி, மாவனல்லை, மன்னார் சம்பவங்கள் இவற்றிற்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

# நமது அரசியலை நாமே தீர்மானிப்போம்!

ஈழத்தமிழரான நமது அனைத்து அரசியல் அபிலாஷைகளையும் நிறைவு செய்யும் அரசியல் தீர்வினை நம்மைத் தவிர பிறர் எவரும் வரையறுத்துவிட முடியாது. இதுவரை காலமும் சிங்கள அரசும் இந்திய அரசும் தமது நலன் சார்ந்த தீர்வுகளை நம்மீது திணிக்க முயற்சித்து வந்தன. தற்போது ஏகாதிபத்திய சக்திகளும் இவற்றுடன் இணைந்து கொண்டுள்ளன. ஒவ்வொரு அரசியல் நகர்வின் போதும் இந்த ஆதிக்க சக்திகள் தமது நலன்கள், திட்டங்களை நம்மீது திணிக்க முயற்சித்து வருகிறார்கள் என்பதில் நாம் தேசமாக விழிப்பாயிருப்போம். இவர்களது சூழ்ச்சிகளை முறியடித்து நமது அரசியல் தீர்வினை நாமே தீர்மானிக்கும் உரிமையை பாதுகாத்துக் கொள்வோம்.

ஒரு அர்த்தத்தில் நோக்குவோம் எனின், இன்று நோர்வே தரப்பினை இடையில் வைத்துக்கொண்டு நடைபெறும் அரசியல் சமாதான முயற்சிகளானது, ஒரு இராஜதந்திர யுத்தமாகவே அமைந்துள்ளது. அரசியல் ரீதியில் முன்னோக்கிச் செல்வதற்கேற்ப காத்திரமான எதுவும் அரசு மற்றும் நோர்வே தரப்பில் வெளிப்படவில்லை. அந்தளவிற்கு அரசு தரப்பிலும் வல்லரசுகளின் தரப்பிலும் நமது தேசிய நலன்களுக்கு எதிரான செயற்பாடுகள் தெள்ளத் தெளிவாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சர்வதேச சமூகத்திற்கு முன்னே பரஸ்பரம் ஒருதரப்பினை மறுதரப்பு அம்பலப்படுத்தும் ஒரு முயற்சியாகவே விடயங்களின் நகர்வுகள் உள்ளன. இருந்தாலும், இந்த இராஜதந்திர யுத்தத்திலும் நமது தேசம் வெற்றி பெற்றாக வேண்டும். இன்றைய உலக ஒழுங்கில் இந்த வெற்றி நமக்கு அத்தியாவசியமாகும். சிக்கலான பல படிகளுக்கூடாக நாம் இலக்கு நோக்கிச் செல்ல வேண்டியிருக்கும். இவ்வெற்றியானது நமது தேசத்தின் இறுதி இலக்கினை அடைவதற்கு பல படிக்கற்களில் ஒன்று. இதற்கு மேல் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அரசியல் தீர்விற்கான நகர்வுகளில் நமக்குக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியது எதுவும் இல்லை. இதில் நமக்கு எந்தவித மயக்கத்திற்கும் இடமில்லை. அதிக நம்பிக்கை வைக்கவும் தேவையில்லை.

தோல்வியின் விளிம்பில் நிற்கும் அரசும், அதன் எஜமானர்களும் இறுதி நேரங்களில் நமது தேசத்தினை திருப்தி செய்துவிடுவதற்கு பல்வேறு வழிமுறைகளையும் பயன்படுத்துவர். நமது தேசத்தின் வலிமையான போராட்டத்தின் முன்பு அடிவாங்கி, அவமானப்பட்டுப் போயிருக்கும் எதிரி, தன்னைச் சுதாகரித்துக் கொண்டு மீளவும் தாக்குதல் நடாத்த எல்லா வகையான வழிமுறைகளையும் பயன்படுத்துவர். பொதுவில் எதிரிகளின் வழிமுறை இதுவே. இதில் அமைதித் தீர்வுபற்றி அழுத்தும் ஆதிக்க அரசுகள் இடைநடுவிலான, தமக்குத் தோதான ஒரு தீர்வு நோக்கி நமது தேசத்தை இழுத்துவிட தனியான முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. இவ்விடயத்திலும் நாம் தேசமாகத் தெளிவு கொண்டிருப்போம் எனின், இறுதி வெற்றி நமது மக்களுக்கே.

1987ம் ஆண்டில் நமது விடுதலைப் போராட்ட நலன்களுக்கும் இந்திய மத்திய அரசின் நலன்களுக்கும் இடையிலான முரண்பாட்டை சிறிலங்கா அரசு பயன்படுத்திக் கொண்டது. நமது தேசத்துடன் இந்தியப் படைகளை மோதலுக்குத் தள்ளிவிட்டது. விடுதலைப் போராட்டம் ஒரு இடைக்காலப் பின்னடைவிற்கு உள்ளாக்கப்பட்டது. பெரும் மனித அழிவுகளுடன் தேசத்தின் வளங்கள் பலவும் சிதைக்கப்பட்டன. இறுதியாக வெற்றிபெற்றது நம்தேசம்தான். இப்போதும் இன்னுமொரு சதி முயற்சி அரசின் நிகழ்ச்சிநிரலில் உள்ளது. அதாவது, ஏகாதிபத்திய அரசுகளின் நலன்களை நமது விடுதலைப் போராட்டத்துடன் மோதவிட்டு, விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்திட சிறிலங்கா அரசு புதியவகையில் தீவிரமாக முயற்சிக்கின்றது. இந்த முயற்சிகள் அனைத்தும் தொடக்கதிலிருந்தே படுதோல்வியடைந்து வருவதன் காரணமாக அரசு சமனிலை இழந்து தடுமாறுகின்றது. தற்போது நமக்குக் கிடைத்துள்ள இந்த வாய்ப்பினையும் நாம் தேர்ச்சியுடன் பயன்படுத்துவோம்.

சிறிலங்கா அரசானது நமது தேசத்தின் எதிரி என்ற பண்பில் இருந்து ஒரு சிறு அளவேனும் மாற்றத்தைக் காட்டவில்லை. நம்மைப் பொறுத்தவரையில், ஒரு அரசியல் மூலாதாரப் பிரச்சனையை நல்லெண்ணம், புரிந்துணர்வு என்பதாக எளிமைப்படுத்தும் முயற்சிகளும் சரி, அதனை நாம் நம்புவதும் சரி மிக ஆபத்தானதாகும். கேள்விக்கிடமின்றி அவர்கள் எதிரிகள் என்பதால் எந்தவொரு நியாயமான, சமத்துவமான அரசியல் தீர்விற்கும் அவர்கள் தயாராக இருக்க மாட்டார்கள். அது அவர்களால் முடியாது. அப்படித் தயாராக இருப்பதாகக் காட்டிக்கொள்ளவது யாவும் அப்பட்டமான நடிப்பே. அவர்கள் எதிரிகளே தவிர, சமத்துவமாக அருகருகே அமர்ந்து அரசியல்பேச்சுக்கள் நடாத்த எந்த இலாயக்கும் அற்றவர்களாகும். இதனைத் தெளிவாகத் தெரிந்து கொண்டே நம்தேசம் அரசியல் பேச்சுக்களிலும் இறங்க வேண்டும். தருணம் கிடைக்கும்போது எதிரிகள் மறுபடியும் தாக்குதல் நடாத்துவர் என்ற எச்சரிக்கை எப்போதும் நமக்கு வேண்டும்.

இப் பின்புலத்தில் நோக்குவோம் எனின், சிறிலங்காவின் ஆள்புல எல்லையில் மாற்றம் ஏற்படுத்தாத, அதன் இறைமைக்குட்பட்ட, பிரதேச ஒருமைப்பாட்டை மீறாத அரசியல் தீர்வு என்பது எவ்வளவு அபத்தமானது என்பதை நாம் புரிந்து கொள்கின்றோம். ஆதிக்க அரசுகளினதும் சிறிலங்கா அரசினதும் இரகசிய நிகழ்ச்சி நிரலையும் தெளிவாகப் புரிந்து கொள்கின்றோம்.

இந்த வகையில், நடைமுறையில் இருக்கும் அவர்களது அரசியல் யாப்பு போன்ற ஒன்றை அங்குமிங்குமாக சரிசெய்வது, வார்த்தையாடல்களில் மாற்றங்களை செய்துவிடுவதெல்லாம் அவர்களின் அதிகார அரசியலையும் முன்னிபந்தனைகளையும் நம் மீது திணிப்பது தவிர வேறென்ன?

நாம் ஒரு தனியான, தனித்துவமான இறைமை கொண்ட தேசம். நமது தேச நலன்களில் இருந்து தான் நாம் எந்தவொரு அரசியல் ஏற்பாட்டினையும் பரிசீலனை செய்வோம். எமக்குரிய பாதுகாப்பு உத்தரவாதத்தை எவர் வசமும் ஒப்படைக்க மாட்டோம்.

எனவே எமக்குரிய பாதுகாப்பு, எமக்குரிய நிதி, நீதி, சட்டம், ஒழுங்கு, வெளிநாட்டுக் கொள்கை, போக்குவரத்து, இயற்கை வளங்களின் பயன்பாடு, உள்ளக கட்டுமானங்கள் உட்பட இன்னோரன்ன விடயங்களையும் நாமே தீர்மானிக்கும் உரிமையை நமது கைகளில் எடுத்துக்கொள்வோம். அதற்கான தயாரிப்புகளில் இப்போதிருந்தே ஈடுபடுவோம். தேசத்திலுள்ள அனைத்து பிரிவினரதும் நலன்களை நியாயமான வகையில் உத்தரவாதம் செய்கின்றதும், நமது சொந்தக்கால்களில் நாமே நிற்கின்றதுமான ஒரு உயர்ந்த அரசியல்யாப்பினை நாம் வரைந்துகொள்வதை நோக்கி முன்னேறுவோம். இந்த முயற்சியானது, நமது தேசத்தையும் தமிழ் மக்கள் அனைவரையும் அரசியல் ரீதியில் உள்ளார்ந்து ஓரணியில் திரட்டும் பாத்திரத்தை நிச்சயம் ஆற்றும். இது நமது தேசியவிடுதலையின் வெற்றியை மேலும் உத்தரவாதப்படுத்தும்.

விண்ணப்ப அரசியல், (Appeal politics), கோரிக்கை அரசியல் (Request politics) என்பவற்றுக்கான காலங்கள் யாவும் முடிந்து விட்டன. அரசியல் இடைத்தரகர்கள் எவரும் நமக்கு அவசியமில்லை. தற்போது தீர்மானகரமாகவும் சுதந்திரமாகவும் நமது அரசியல் எதிர்காலத்தை நாமே தீர்மானிக்கும் அரசியல் (Deterministic politics) கால கட்டமாகும். இத்தீர்மானிக்கும் அரசியல் காலகட்டமானது நமது தேசம் தமிழீழ குடியரசை அமைப்பதற்கு அனைத்து தளங்களிலும் திட்டமிட்ட முன்தயாரிப்புகளில் தீவிரமாக ஈடுபட வேண்டிய காலகட்டமாகும்.

♦ தருமு

**படையினர் இழைக்கும்**..(1ம் பக்க..

தமிழீழப் பிரதேசத்தைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் உள்ள படையினர் தாம் யுத்தமுனைக்கு செல்வதைத் தவிர்ப்பதற்கு தாமே சில குண்டுவெடிப்புகளைச் செய்து யுத்த முனைக்கு அனுப்பப்படுவதை தவிர்க்க முனைகின்றனர். இவ்வாறான குண்டுவெடிப்புச் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன. அண்மையில் அரசு அக்கினிச்சுவாலை பாரிய தாக்குதலுக்கு திட்டமிட்ட போது, கொழும்பின் மையப்பகுதியில் படையினர் தாமே குண்டொன்றை வெடிக்கச் செய்துள்ளனர். அவ்வாறே கடந்த காலத்தில் மலையகப்பகுதியில் அனேகமான ட்ரான்ஸ்போமர் குண்டுவெடிப்புகளை பொலீசார் செய்து, தாம் வடக்குக்கு போகாது மலையகத்தில் தொடர்ந்திருக்க வாய்ப்பை உருவாக்க முயன்றுள்ளனர்.

அவற்றையும்மீறி அனுப்பப்படுவோர் ஆக்கிரமிக்கப்பட்ட நமது மண்ணில் நமது மக்கள் மீது சிறிய பெரிய குற்றங்களை நன்கு திட்டமிட்டு இழைக்கின்றனர். இக்குற்றச்செயல்களுக்குத் தரப்படும் இடமாற்றத் தண்டனையை போர்முனையில் இருந்து தப்பிச்செல்வதற்கு வாய்ப்பாக் பயன்படுத்துகின்றனர்.

இந்த வகையில், சிங்களப் படையினர் நமது மக்களின் மீது இழைக்கும் போர்க் குற்றச் செயல்களுக்கு அரசினால் வழங்கப்படும் தண்டனையானது அவ்வாறான குற்றங்களை ஊக்கப்படுத்துவதாக இருக்கின்றதே ஒழிய அதனை குறைப்பதற்கானதாக இல்லை. இந்த வகையில் அரசும் ஆட்சித்தலைமையும் தம்மைப் பாதுகாக்கும் படையினருக்கு உளப்பூர்வமாக தண்டனை அளிப்பார்கள் என எதிர்பார்ப்பதும் அவ்வாறு செய்யுமாறு கோரி அறிக்கைகள் விடுவதும் அவசரத் தந்திகள் அனுப்புவதும் அர்த்தமற்றதாகும்.

# மே தினப் பிரகடனம்

உலகம், ஏகாதிபத்திய முகாம் என்றும் மூன்றாமுலகம் என்றும் மென்மேலும் துருவமயப்பட்டுக் கொண்டு வருகிறது. ஏகாதிபத்திய முகாமினதும், வெள்ளை நாடுகளினதும், ஆசியாவில் ஜப்பானினதும் கரங்களில் அபரிமித செல்வம் திரள்கிறது. பொருளாதாரம், இராணுவம், அரசியல் எனும் அனைத்துத் தளங்களிலும் உலகின் மீது தமது ஆதிக்கத்தை நிறுவிக் கொண்டிருக்கும் இச்சக்திகள், மூன்றாமுலக மக்களின் உழைப்பை தமது சுரண்டலின் பிரதான களங்களாக உருவாக்கியுள்ளன. மூலவளங்களை அபகரிக்கின்றன.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான புதிய உலக ஒழுங்கும் அதை செயற்படுத்தும் நிறுவனமான உலக நிதி வர்த்தக நிறுவனங்களும் உலகெங்குமுள்ள தரகு முதலாளித்துவ அரசுகளுடன் கரம் கோர்த்து தமது சுரண்டலை திட்டமிட்ட முறையில் அமுலாக்கி வருகின்றன. பல லட்சக்கணக்கான மக்களை உள்ளடக்கியதாக பாரிய சுதந்திர வர்த்தக வலயங்கள் எனப்படும் சுரண்டல் பிரதேசங்களை நிர்மாணிக்கின்றன.

மனித சமூகத்தின் தேவைக்கான உற்பத்தி என்பதற்கு மாறாக ஏகாதிபத்தியத்தின் லாபத்தை, மூலதனத் திரட்சியை குறிக்கோளாகக் கொண்டு நிர்மாணிக்கப்படும் இப்பெரும் தொழிற் பிரதேசங்களில், தனக்கு விரிக்க பட்டுள்ள வலையில் தானே சென்று விழும்பறவையைப் போல்தமது வாழ்வுக்கு வேறு மார்க்கங்களற்ற நிலையில், மூன்றாமுலகின் மக்கள் இவ் ஏகாதிபத்திய சுரண்டலுக்கு தமது உழைப்பை வழங்கும் நிலைமை திட்டமிட்ட முறையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஏகாதிபத்திய சக்திகள் மூன்றாமுலக மக்களின் உழைப்பைச் சுரண்டுவதுடன் நிறுத்திக் கொள்ளவில்லை. நீண்ட காலத்தில் தமக்கு மிக மலிவான கூலிக்கு உழைப்பை வழங்கக் கூடிய, தமது அதிகாரத்திற்கு அடிமைப்பட்டுக் கிடக்கக் கூடிய உலகமொன்றை ஸ்தாபிப்பதற்காக மூன்றாமுலகில் உள்நாட்டு யுத்தங்களையும், இனவெறி வன்முறைகளையும், செயற்கையான பஞ்சங்களையும், இன்னபிற அழிவுகளையும் தூண்டி வருகின்றனர்.

இந்நிலையில், ஏகாதிபத்திய கூட்டுக்கும் மூன்றாமுலக மக்களுக்குமிடையிலான பகைமை கூர்மையடைந்து வருகிறது. அன்றாட போராட்டங்களும் எதிர்ப்பு முழக்கங்களும் மூன்றாமுலக மக்களது வாழ்வில் அங்கமாகியுள்ளன. ஏகாதிபத்தியத்தின் அனைத்து வகைப்பட்ட ஆக்கிரமிப்பையும் எதிர்த்து போராடிக் கொண்டிருக்கும் புரட்சியின் கொதிதளங்களாக, புரட்சியின் மையமாக மூன்றாமுலகு மாறிவருகின்றது. இப் புரட்சிகர எழுச்சியின் அக்கினிப் பிளம்பாக, பிரதான சக்தியாக உழைக்கும் மக்கள் திகழ்கின்றனர்.

தீப் பிழம்பாகக் கனலும் இவ் உழைக்கும் மக்கள் தமது தினமாக மே முதல் திகதியை அனுஷ்டிக்கின்றனர். 100 வருடங்களுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட இத் தொழிலாளர் தினமானது உலகெங்கும் உழைப்பிலும் போராட்டத்திலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் மக்களை உணர்வுகளால் ஒருங்கிணைக்கும் தினமாயுள்ளது. உழைக்கும் மக்களின் போராட்டங்களதும் உயிர்த்தியாகங்களதும் அடையாள தினமாயுள்ளது.

மானுட வாழ்வின் சாரமான உழைப்பின் கர்த்தாக்களான தொழிலாளர்களின் தினத்தில் யுத்த நெருப்பின் மத்தியில் தமிழீழ தாயகத்தை நிர்மாணித்துக் கொண்டிருக்கும் நம் தேசத்தின் உழைப்பாள மக்களின் விடுதலைக்காக போர்க்குரல் உயர்த்துவோம். ஏகாதிபத்தியத்தினதும் தரகு முதலாளித்துவத்தினதும் ஆக்கிரமிப்பை முறியடித்து உழைக்கும் மக்களின் நலன்காக்கும் தமிழீழ குடியரசை ஸ்தாபிப்போம் என தேசமாக உறுதிகொள்வோம்.

## 10ஆவது வருட நினைவஞ்சலி

### மக்களது அரசியல் அதிகாரத்திற்கான போராட்டத்தில் குரல் நெரிக்கப்பட்ட போராளி



தோழர் நோபேட் (கேசவன், டொமினிக், ஜீவன்)

பிறப்பு : 1948-05.02 வீரமரணம்: 1991-05-15

**தோழர் நோபேட்:** தமிழீழ விடுதலைப் போராட்டம உருவாக்கிய சிறந்த மார்க்சிய சிந்தனையாளர்களில் ஒருவர். தேச விடுதலைப் போராட்டத்தை மக்களது அரசியல் அதிகாரத்தை உறுதிப்படுத்தும் ஜனநாயகமான போராட்டமாக முன்னெடுத்திடும் புரட்சிகர இலட்சியத்துடன் மக்கள் விரோத கொள்ளை மற்றும் உட்கட்சி ஜனநாயக மறுப்புகளுக்கு எதிராக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திலிருந்து வெளியேறி நமது கட்சியின் முன்னோடி அமைப்பான தீப்பொறி அமைப்பினை ஸ்தாபித்தவர்களுள் ஒருவர். ஆயுதமேந்திய விடுதலைப் போராட்ட அமைப்புகளுக்குள் கருக்கொண்டு வரும் பாசிசக் கூறுகளின் அபாயம் குறித்தும், அதற்கு மாற்றாக மக்கள் போராட்டம் பலம்பெற வேண்டியதன் அவசியம் குறித்தும் தீப்பொறி பத்திரிகை ஊடாக (1986இல்) மக்கள் மத்தியில் கருத்துக்களை முன்வைத்தவர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தோய்ந்து பிறந்த தலைசிறந்த இலக்கியமான புதியதோர் உலகம் நாவலின் ஆசிரியர்.

தோழர் நோர்பேர்ட் தாயகத்தில் கட்சிப் பணிகளில் ஈடுபட்டிருந்த போது 1991 மே மாதம் 15ம் நாள் யாழ்ப்பாணம் கொக்குவில் பிரதேசத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளினால் கடத்தப்பட்டு குறிப்பிட்ட காலம் தடுத்துவைக்கப்பட்டிருந்ததன் பின்னர் படுகொலை செய்யப்பட்டார்.

புரட்சிகர வாழ்வு, ஜனநாயகமான கட்சி அக உறவு, மக்களின் அன்பு ஆகிய தலைசிறந்த பண்புகளின் வழிகாட்டியாய் திகழ்ந்த தமிழீழ போராளியாகிய தோழர் நோர்பேட்டுக்கு தமிழீழ மக்கள் கட்சி தனது வீர வணக்கங்களை செலுத்துகின்றது.

"தமிழீழ விடுதலைப் போராட்டம் வன்முறையில் நம்பிக்கைகொண்ட ஆயுதமேந்திய போராட்டமாயினும் அது ஒரு பொழுதும் அராஜகத் தன்மை கொண்டதாகவும் மக்களுக்கு எதிராகவும் சக விடுதலைப் போராளிகளுக்கு எதிராகவும் ஆயுதம் திருப்பப்படுவதை அனுமதிக்க முடியாது. விடுதலைப் போராட்டத்தில் என்றும் மனிதாபிமானமும் மானுட உயிர்ப்பிற்கான ஆவலும் மேலோங்கி இருக்க வேண்டும். தமிழீழ விடுதலைப் போராட்டம் இவற்றை இழந்து செல்லுமாயின் இன்னொரு அராஜகத்திற்கும் ஒடுக்குமுறைக்குமான வழியாகவே அமைந்துவிடும்" - கோவிந்தன் - புதியதோர் உலகம்

## மாவனல்லை... (1ம் பக்க )

ஆர்ப்பாட்டங்கள் ஒரு உண்மையை புலப்படுத்தியது. எந்த மூலையில் முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டாலும், அனைத்து முஸ்லிம் மக்களும் ஒன்று திரண்டு குரல் எழுப்புவர். தட்டிக்கேட்பர் என்பதே அந்த உண்மையாகும். இவ்வாறான கண்டனப்பேரணிகள், கடையடைப்புகளின் போது, அவர்கள் அரசுக்கும் அதன் ஆயுதமேந்திய கூறுகளுக்கும் எதிராகவே தமது செயற்பாடுகளை திருப்பியுள்ளனர். கூடவே அடக்குமுறைகளும், வேண்டுமென்றே ஆத்திரமூட்டல்களும் ஆயுதப்படைகளினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தம்மால் முடிந்தளவிற்கு பொறுமை காத்தபின்பும் இவ்வாறாக முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் இனியும் தொடரும் எனின்...சிறிலங்காவெங்கும் பாரம்பரியமாக பரந்து வாழும் முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் இப்பிரச்சனைக்கு நீண்ட கால அடிப்படையிலான தீர்வு என்ன? என்பது இப்போது கொழுந்துவிட்டெரியும் ஒரு கேள்வியாகியுள்ளது. ஏற்கனவே இதுபற்றிய விவாதம் தொடங்கிவிட்டதையும் அவதானிக்கலாம். இப்பிரச்சனையானது, இனத்துவம் என்பதைக் கடந்து தேசியவாதப் போக்கினை எடுக்குமா? என்பதை நோக்கி நாம் பார்வையைத் திருப்ப வேண்டும்.

தேசியவாதமானது, பாரம்பரியப் பிரதேசம், தொடர்ச்சியான நிலப்பரப்பு, ஒன்றிணைந்து பொருளாதாரம் இன்னோரன்னவற்றால் மாத்திரம் அவசியமாகத் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதில்லை. பன்முக சமூக இருப்புகள் உள்ள ஒரு ஆட்சிக்கட்டமைப்பில், நிலவும் அரசின் ஆட்சி இயந்திரங்கள், குறிப்பாக பிரஜைகள் அனைவரையும் சமத்துவமாக பாதுகாக்க வேண்டிய ஆயுதமேந்திய இயந்திரமானது, ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு எதிராக மறுபடியும் மறுபடியும் திட்டமிட்ட வகையில் திருப்பப்படும்போது, அங்கு அடக்கப்படும் சமூகத்தினது தேசியவாத எழுச்சிக்கான அத்திவாரம் இடப்பட்டு விடுகின்றது. ஒருசில வருடங்களுக்கு முன்னர், கொழும்பு நகர்ப்புற முஸ்லிம் மக்களுக்கு எதிராக பொலிஸ் அடக்குமுறை நன்கு திட்டமிட்டுப் பிரயோகிக்கப்பட்ட போது, இவ்விடயம் குறித்து ஒரு அரசியல் ஆய்வாளர் மேற்படி தெளிவான எச்சரிக்கையொன்றை விடுத்திருந்தார்.

மாவனல்லையில் மிகவும் குறுகிய நேரத்தில், ஊரடங்கு அமுலில் இருக்கும் போது, பாரிய அழிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை, சிங்கள இனவெறிச் செயலாக திட்டவட்டமாக ஏற்றுக்கொள்ளாது, இதனை எளிமைப்படுத்திக் காட்டும் அல்லது திசை திருப்ப மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான சிங்கள இனவெறியை மேலும் உற்சாகப்படுத்துகின்றது. ஆதரித்துப் பலப்படுத்துகின்றது. அரசு தரப்பு வெளிப்படையாக இதனையே செய்துள்ளது. இவ்வாறாக பாதிப்புகளையும் எதிர்ப்புகளையும் வெளிப்படுத்தும் பாதிக்கப்பட்டோரின் தரப்பிலான முயற்சிகளை ஆட்சியாளர்கள் அடக்குமுறை இயந்திரம் கொண்டு திட்டமிட்ட முறையில் நசுக்க கடுமையாக முயன்றுள்ளனர். இவை அனைத்தும் சிங்கள இனவாதமானது மேலிருந்து கீழ் வரை பரந்து வியாபித்து நிற்கின்றது என்பதை இன்னுமொரு தளத்தில் நிரூபித்துள்ளது.

# தமிழீழ மக்கள் குடியரசின் அடிப்படைப் பிரிவினர்கள்: 07

# சிறுவர்கள்

தமது சமூக, பொருளாதார, உடல் ரீதியான பாதுகாப்பிற்காக தாம் வாழுகின்ற சமூகத்தை, பெரியவர்களை சார்ந்திருக்கும் பிரிவினர்களாக சிறுவர்கள் அடையாளங் காணப்படுகிறார்கள். சமூகத்தினதும் தாம் சார்ந்த குடும்பத்தினதும் பாதுகாப்பு, பராமரிப்பு, அரவணைப்பு கிடைக்கப்பெற வேண்டிய, விசேஷ அக்கறைக்குள்ளாக வேண்டிய பிரிவினர்களாக சிறுவர்கள் உள்ளனர்.

உடல் - உள ரீதியாக முழுமையான மானுடர்களாக பரிணமித்துக் கொண்டிருக்கும் கட்டத்தில் இருக்கும், இதனால் தமக்கான சுயாதீனமான வாழ்வை தாமாக தீர்மானித்துக் கொள்ள முடியாத பக்குவத்தில் இருக்கும் சிறுவர்களது பாதுகாப்பு மற்றும் அடிப்படை உரிமைகள் சார்ந்து ஐ.நா. உட்பட உலகின் பல்வேறு கூட்டமைப்புகளினாலும் சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலை நாடுகள் தமது மக்கள் மத்தியில் இவற்றை அமுலாக்குவதில் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆனால் மூன்றாமுலகின் சிறுவர்களது யதார்த்த வாழ்வோ இச்சட்டங்களுக்கு முற்றிலும் எதிர்மறையாயுள்ளது.

ஏகாதிபத்திய சுரண்டலின் மையமாக மாறியிருக்கும் மூன்றாமுலகில், ஈவிரக்கமற்ற சுரண்டலின் விளைவான மானுட அவலங்களில் ஒன்றாக சிறுவர்களின் சமூக பிரச்சனைகள் உருவாகியுள்ளன.

சிறுவர்கள் சார்ந்திருக்கும் பிரிவினர்கள் எனக் கூறப்படினும், இன்று மூன்றாமுலகின் சிறுவர்களின் உழைப்பானது அவர்களின் குடும்பங்களை போஷித்திடுமளவுக்கு நிலைமைகள் உள்ளன. மிக மோசமான தொழிற்சூழலில், அதிகளவு உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளாகியபடி சிறுவர்கள் தமதும் தம்மை சார்ந்தவர்களதும் அன்றாட வாழ்வை நடாத்துவதற்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

சுரண்டலுக்கும், அடக்குமுறைகளுக்கும், வன்முறைகளுக்கும் மிகவும் இலகுவில் உள்ளாகிடும் பிரிவினர் மூன்றாமுலகின் சிறுவர்கள் என்றால் அது மிகையில்லை. தமக்கான குறிப்பான சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சனைகளைக் கொண்டிருக்கும் பிரிவினர்களான சிறுவர்கள் சமூகத்தின் அடிப்படைப் பிரிவினர்களாக அமைகிறார்கள்.

நவகாலனித்துவ பிடிக்குள் இறுகியிருக்கும் சிறிலங்கா அரசும், இலங்கைத் தீவின் சிறுவர்களது நலன் சார்ந்து எந்த அக்கறைகளையும் கொண்டதாயில்லை. சிறுவர் உரிமைகள் சார்ந்து தனது பாராமுகப் போக்கினாலும் அடக்குமுறை சட்டங்களினாலும் அரசு தானே சிறுவர்களை அடக்கும் இயந்திரமாக செயற்பட்டு வருகிறது.

அதிகரித்து வரும் பொருளாதார நெருக்கடி மற்றும் வறுமை காரணமாக இலட்சக் கணக்கான சிறுவர்கள் பட்டினியில் வாடும் நிலை உருவாகியுள்ளது. ஆயிரக்கணக்கான சிறுவர்களுக்கு முறையான அடிப்படைக் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. குழந்தை உழைப்பாளர்கள் அதிகரித்து வருகின்றனர். சிறிலங்காவின் கரையோரப் பகுதிகளை மையப்படுத்தி 40,000 இற்கும் அதிகமான சிறுவர் பாலியல் தொழிலாளர்கள் உருவாக்கப்பட்டுள்ளார்கள். மலையகத்தை மையப்படுத்தி வீட்டு வேலை மற்றும் கடைச் சிப்பந்திகளுக்கான சிறுவர்கள் உருவாக்கப்படுகிறார்கள்.

குறிப்பாக பெண் சிறார்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டு



படுகொலைக்குள்ளாவது, சொந்த குடும்ப ஆண்களாலேயே (தந்தை, சகோதரன், உறவினர்) துஷ்பிரயோகங்களுக் குள்ளாவது அதிகரித்து வருகிறது. இதேபோல் ஆண் சிறுவர்களும் பாலியல் துன்புறுத்தல்கள், அத்துமீறல்களை எதிர்கொண்டு வருகின்றனர். ஆனால் அரசோ இவற்றை சமூக அளவில் தடுத்து நிறுத்த எந்த முயற்சிகளையும் மேற்கொள்ளாததுடன் குற்றவாளிகளை தண்டிப்பதில் கூட சிரத்தையற்று உள்ளது.

சிறுவர்களை வேலைக் கமர்த்துவது சட்ட ரீதியாக தடைசெய்யப்பட்டிருப்பினும் கூட, அதிகாரத்திலுள்ளவர்களே இதை மீறுவதால், இது வரையிலும் செயல்படுத்தப் படாததாகவே உள்ளது.

தங்குமிட வசதி இன்றி தெருவோரங்களையே தமது வசிப்பிடமாகக் கொண்டு பிச்சையெடுத்து வாழும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. நகர தூய்மையாக்கம், அபிவிருத்தி எனும் பெயரில் பிச்சைக்காரர்களை பலவந்தமாக அப்புறப்படுத்தும் அரசு தெருவோரங்களில் அனாதரவா பிச்சையெடுத்து வாழும் சிறுவர்களுக்கு பராமரிப்புவழங்குவதில் எந்த முயற்சியும் அற்று உள்ளது.

சிறுவர் குற்றவாளிகளுக்கு பெரியவர்களுக்கு போன்றே சிறுவர்களின் உள ஆரோக்கியம் பற்றிய கரிசனையற்று தண்டனைகள் வழங்கப்படுகின்றன. குற்றமிழைக்கும் சிறுவர்கள் பெரியவர்களைப் போன்றே பொலிசினால் கைதுசெய்யப்பட்டு 14 நாட்கள் தடுப்புக் காவலில் இருந்த பின்னரேயே நீதிமன்றினால் சிறுவர் புனர்வாழ்வு மையத்திற்கு அனுப்பப்படுகின்றனர். கைதுசெய்யபடும் நிலையில் பொலிசின் வன்முறைப் பிரயோகங்களையும் எதிர்கொள்கின்றனர்.

பெற்றார், பாதுகாப்பாளர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்படுகையில் சிறுவர்களது பராமரிப்புக்கான மாற்று ஏற்பாடுகள் அற்ற நிலையில் சிறுவர்களும் தாம் சார்ந்த பெரியவர்களுடன் சிறைகளில் வாட நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

"சிறுவர்களை தண்டிப்பது அவர்களை திருத்துவதற்காகவே" எனும் ஆதிக்க கருத்தாக்கம் சமூகத்தில் நிலவுவதால் குறிப்பாக பெரியவர்களினால் (குடும்பங்களிலும், பாடசாலைகளிலும்) சிறுவர்கள் மீது உடல்- உள ரீதியாக தண்டனை எனும் பெயரில் மேற்கொள்ளப்படும் வன்முறையும் அதிகாரத்துவமும் சார் நடவடிக்கைகளுக்கு மௌன அங்கீகாரம் நிலவுகிறது. இதற்கெதிரான விழிப்புணர்வூட்டல் பிரச்சாரம் பற்றிய அக்கறையற்றதாக அரசு உள்ளது.

இப்படியாக, பொதுவில் சமூக, சட்ட, பொருளாதார, அரச நடவடிக்கைகளினால் நாளாந்தம் சிறுவர்களின் வாழ்வு அடக்குமுறைக்கும் இம்சிப்புக்கும் உள்ளாகிவருகிறது.

சிறுவர் உரிமைகளில் அக்கறையற்று அவர்களை அடக்கிவரும் சிங்கள இனவெறி அரசு, தமிழீழத்தின் எதிர்காலமாயிருக்கும் நம் தேசத்துச் சிறுவர்களை திட்டமிட்டமுறையில் நசுக்கி வருகிறது.

யுத்தத்தின் அனைத்து அவலங்களையும் நம்தேசத்துச் சிறுவர்களும் சுமந்து கொண்டுள்ளனர். 20 வருடகால ஆக்கிரமிப்பு யுத்தத்தினால் நம் தேசத்தின் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் கொன்றொழிக்கப்பட்டுள்ளனர். பலர் அங்கவீனராகியுள்ளனர். இன்னும் பலர் உளப் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

பொருளாதார தடை விதித்து இனவெறியரசு நமது சிறுவர்களை பட்டினி போடுகிறது. பட்டினியாலும், நோய்க்கு மருந்தின்றியும் நமது பிள்ளைகள் நம் கண்களுக்கு முன்னாலேயே மடிந்துகொண்டிருக்கின்றனர். போஷாக்கற்ற சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. யுத்த இடம் பெயர்வுகள், விமானக் குண்டு வீச்சுகள் காரணமாக பாடசாலைகள் சீராக இயங்காததாலும், கற்றல் நூல்கள் மற்றும் சாதனங்கள் இன்மையாலும், உணவின்மையாலும் சிறுவர்களால் தமது அடிப்படைக் கல்வியை முறையாக பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

எல்லாவற்றையும் விட இனவெறி படைகளின் சித்திரவதைகளை நமது சிறுவர்கள் நேரடியாக அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். படுகொலைகள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் என நமது சிறுவர்களை சிங்களப் படைகள் சிதைத்துக் கொண்டிருக்கின்றன. பயங்கரவாதிகள் எனும் போர்வையில் கைது செய்து காவல் கொட்டடிகளிலும், புனர்வாழ்வுமையங்களிலும் அடைத்து வைத்து துன்புறுத்தி வருகிறது சிங்கள அரசு.

நம் தேசத்தின் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். பலர் பெற்றார்களை இழந்து அனாதைகளாக்கப் பட்டுள்ளனர். பிச்சையெடுத்து வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

தேசிய அடக்குமுறையை தம்மளவில் அனுபவிக்கும் நமது சிறுவர்கள் தேசத்தின் விடுதலைக்காக தமது பிஞ்சுப் பருவத்தில் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய நிலைமைக்கு சிங்கள அரசு அவர்களை தள்ளிவிட்டுள்ளது. தமது பிள்ளைப் பருவத்தை அதற்குரிய முறையில் களிப்பதற்குப் பதிலாக நமது சிறுவர்கள் யுத்த முனையில் களப்பலியாகிறார்கள்.

யுத்தத்தினால் சிதைந்து போயிருக்கும் தமது குடும்பப் பொருளாதாரத்தை - தேசத்தின் பொருளாதா

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

# மாற்று அரசியல் கருத்துகளும் சகிப்புணர்வின்மையின் பாதகங்களும்

நமது சமூகத்தின் அகவாழ்வானது, நாம் இன்றைய உலகில்வளர்ச்சி பெற்றிருக்கும்ஜனநாயக சிந்தனைகளுடன் ஒப்பிட்டு நோக்குகையில், அவ் ஜனநாயக தன்மைகளுக்கு ஈடுகொடுக்க முடியாத இறுக்கமான சமூக உறவுகளைக் கொண்டதாயுள்ளது.

அடிப்படையில் நமது சமூக உறவுகள் "நாம்" "பிறர்" என்பதாகவே வகைப்படுத்தப்பட்டுள்ளன. நமது பிரதேசம், நமது ஊர், சாதி(ஆதிக்க சாதிய பிரிவினரிடையே நாம் உயர்சாதி எனும் அகந்தை மனோபாவம்), பாலினம் (ஆண்களிடையே தாம் "ஆண்" எனும்ஆணவம்), குடும்பம்என அதிகாரத்துவ வகைப்பட்ட உறவுமுறைமையினால் இறுக்கமாகக் கட்டமைக்கப்பட்டிருக்கும்இவ்வலகுகள் அனைத்தும் நம்மையும் நாம் சார்ந்தவர்களையும் மற்றவர்களில் இருந்து வேறுபடுத்துகின்றன. குடும்பம் எனும் மிகச் சிறு அலகிலும் தனிநபர்களிடையே பெரியவர் - சிறியவர், ஆண் - பெண் எனும் அதிகாரவயப்பட்ட பாகுபாடுகள் நிலவுகின்றன.

மனிதர்களுக்கிடையே அதிகாரவயப்பட்ட, ஒருவர் மற்றவரை "பிற" ராக வேற்றுமையுடன் அணுகும் உறவு முறையினைக் கொண்டுள்ள நமது சமூகத்தில், பிறராக கருதப்படும் சக மனிதர்கள் மீது நமது நலன்களையும் அதிகாரங்களையும் நிறுவிட முயலும் பண்பை நாம் கொண்டுள்ளோம். இதன் காரணமாக சகமனிதர்களின் சமூக நலன்கள் மற்றும் இருத்தல் மீது சகிப்புணர்வற்ற தன்மை நம்மத்தியில் நிலவுகிறது. நாம் அங்கம் வகிக்கும் குடும்ப அலகும் சமூகமும் சிறுவயது முதல் இவ்வகைப்பட்ட சிந்தனை முறைமைகளுடனும் கலாச்சாரப் பழக்க வழக்கங்களுடனும் நம்மை உருவாக்குகின்றன.

நமது சமூகமானது சகமனிதர்கள் தொடர்பாக சகிப்புணர்வற்ற மனிதர்களின் திரட்சியாகவே உள்ளது. இத்தகைய சமூக அமைப்பில் அரசியல் என்பதும் ஏகபோக அதிகார சிந்தனை கொண்டதாகவும் மாற்று கருத்துகளின் பால் சகிப்புணர்வற்ற தன்மையை வெளிப்படுத்துவதாகவுமே இருந்து வந்துள்ளது. தேசவிடுதலை சார்ந்து உருப்பெற்ற போராட்ட அமைப்புகளும் சமூகத்தின் சிந்தனை முறைமையை அவ்வாறே தமக்குள் கொண்டிருந்ததுடன், அதுபற்றிய மீள்மதிப்பீடுகளும் அற்றனவாகவே இருந்தன. போராட்ட அமைப்புகள் ஒவ்வொன்றும் சக அமைப்புகள் மீது காழ்ப்பை, சகிப்புணர்வின்மையை உமிழ்ந்தன. ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டன. ஈற்றில் விடுதலை புலிகள் அனைத்து அமைப்புகளையும் தடைசெய்யவும், அழித்தொழிக்கவும், சிறைப்படுத்தவும் இப்போக்கு இட்டுவந்தது.

பல்வேறு சமூக நலன்களையும் சிந்தனை போக்குகளையும் உடைய சமூகத்தின் விடுதலை போராட்டங்களில் வெவ்வேறு கருத்துகளை பிரதிபலிக்கும் போராட்ட சக்திகள் உருப்பெறுவது பொது வரலாறாகும். தமிழீழ விடுதலை போராட்டத்திலும் தேச விடுதலையை இலக்காகக் கொண்டு வேறுபட்ட தாபன, அரசியல் கொள்கைகளை பிரதிபலித்த அமைப்புகள் தோன்றின. இவ்வமைப்புகளை சுற்றி மக்கள் திரண்டனர். இவ்வமைப்புகள் தமது தனித்துவங்களை தக்கவைத்துக் கொண்டு தேச விடுதலைக்கான பொது வேலைத்திட்டத்தின் கீழ் மக்களை அமைப்பாக்கி போராட்டத்தை தீர்க்கமுடன் முன்னெடுத்திருக்க முடியும். ஆனால் அடிப்படையில் கூடவே வளர்ந்து வந்த மாற்று கருத்துகளினதும் சக அரசியல் சக்திகளினதும் பாலான சகிப்புணர்வற்ற போக்கின் காரணமாக பன்முக அரசியல் என்பது சிதறடிக்கப்பட்டு போராட்டத்தின் வளர்ச்சி சிதைக்கப்பட்டது.

ஒவ்வொரு அமைப்பிலும் அங்கத்தவர்கள் தமக்கிடையே முரண்பாடுகளைக் கொண்டிருப்பது தவிர்க்க முடியாததாகும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அமைப்புகளின் அகவாழ்விலும் சகிப்புணர்வின்மையே தூக்கலாக இருந்ததால் அகமுரண்பாடுகள் அழித்தொழிப்பின் மூலமே தீர்க்கப்பட்டு வந்துள்ளது. இது போராட்ட அமைப்புகள் உள்ளார்ந்து பலவீனப்பட்டு சிதைவடைய காரணமாயிற்று.

இப்படியாக, சக அமைப்புகள் மீதும், அமைப்புகள் தமது அகத்திலும் கொண்டிருந்த சகிப்புணர்வின்மையானது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அடிப்படை ஆபத்துக் காரணிகளில் ஒன்றாயிருந்து வந்துள்ளது. இப்போக்கே இன்றுவரையிலும் தொடர்கிறது.

உலக புரட்சிகர வரலாற்றில் புரட்சிகர அமைப்புகள் தம்மத்தியிலான முரண்பாடுகளை விமர்சன சுயவிமர்சனம் மூலம் களைந்து முன்னேறும் ஜனநாயக பூர்வமான கொள்கையை முன்வைத்துள்ளன. புரட்சிகர கட்சிகள் கட்சிக்குள்ளேயே மாற்று கருத்துகளை கொண்டிருப்பவர்கள் அணிகளாக செயற்படக்கூடிய சூழலையும் உருவாக்குகின்றன. இது கட்சியில் ஆரோக்கியமான அகவுறவுகள் நிலவவும் கட்சி தன்னளவில் உயிர்த்துடிப்புடன் செயற்படவும் அடித்தளமாயுள்ளது.

அவ்வாறே, புரட்சிகர முகாமானது தேசத்திலும் பல்வேறு அரசியல் சக்திகள் செயல்படுவதை ஏற்றுக் கொண்டு அவற்றின் தனித்துவத்திற்கு கௌரவமளிக்கின்றது.

ஒரு போராட்டத்தில் செயற்படும் பல்வேறு அமைப்புகளுக்கிடையிலும் முரண்பாடுகள் ஏற்படுவதும் தவிர்க்க முடியாததாகும். புரட்சிகர கட்சிகள் சக அமைப்புகளுடனான முரண்பாடுகளின் போதும் தமது சொந்த கட்சியின் அகவாழ்வில் கடைபிடிக்கும் ஜனநாயக கொள்கைகளான விமர்சன சுயவிமர்சனம், தேவைக்கேற்ப விட்டுக்கொடுப்பு போன்ற பண்புகளை முன்நிறுத்தி முரண்பாடுகளை ஆரோக்கியமாக தீர்த்துக் கொள்ள முயல்கின்றன.

இத்தகைய பண்பானது போராட்டம் சார்ந்து மேலும் உயர்ந்த தளத்திலான நம்பிக்கைகளை போராட்ட சக்திகளின் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் வளர்த்திடும். போராட்ட அரசியல் மேலும் திரட்சி பெற்று வெற்றி நோக்கி தீர்க்கமுடன் முன்னேற அடித்தளமிடும்.

தென்னாபிரிக்க போராட்ட சக்திகள், லத்தீன்மெரிக்க தேச விடுதலை அமைப்புகள், மற்றும் காஷ்மீரம். . . . போன்றன மாற்றுக் கருத்துகளின் பாலான பரஸ்பர அங்கீகாரம், பொது வேலைத்திட்டத்தின் கீழ் கூட்டுச் செயற்பாடு, கூட்டுத் தலைமைத்துவம் போன்றவற்றிற்கு சிறந்த வழிகாட்டலாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் எதிர்கொண்டு வந்துள்ள கசப்பான அனுபவங்களில் இருந்தும், தற்பொழுது போராட்டத்தில் காணப்படும் மாற்றுக் கருத்துகளின் பாலான சகிப்புணர்வின்மை என்பதன் பாதகமான விளைவுகளிலிருந்தும் கற்றுக் கொண்டு நமது விடுதலைப் போராட்டத்தின் பன்முக அடிப்படையில் ஜனநாயகப் படுத்துவோம். பல்வேறு அரசியல், வெகுஜன சக்திகளும் போராட்டத்தில் சுதந்திரமாக பங்கேற்று செயற்படும் வகையில் மாற்று கருத்துகளுக்கு உரிய கௌரவமளிப்பதை, மாற்று அரசியல் சக்திகளின் தனித்துவத்தை அங்கீகரிப்பதை பண்பாகக் கொள்வோம். இது நமது போராட்டத்தை பலப்படுத்துவது மாத்திரமல்ல, மாற்று கருத்துகள் பாலான ஜனநாயக அணுகுமுறையை சமூக அளவில் விதைத்து "நாம்" "பிறர்" எனும் ஆதிக்க சிந்தனையை தகர்த்திட அடித்தளத்தையும் உருவாக்கிடும்.

♦ சுபத்திரா

## பேச்சுவார்த்தை....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளடக்கங்களை தன்னிச்சையாக மாற்றிக்கொண்ட வஞ்சகத்தனங்கள் விடுவிக்கப்பட்ட நமது பிரதேசங்களை நான்கு மாத யுத்த நிறுத்த காலத்தில் ஆக்கிரமிக்க முயன்ற கபடக் கோழைத்தனம். இன்று அக்கினிச் சுவாலையில் அவமானகரமாக தோற்றோடிய பின்பு, ஒரே நாளில் அரசின் அறிக்கைகள் மாறுகின்றது. அதன் பண்பு நெகிழ்ச்சியானதாக தோற்றமளிக்கின்றது. ஏதோ விடுதலைப் புலிகள்தான் விடயத்திற்கு தடை என்பது போல பாசாங்கு செய்கிறது. அரசின் இந்த வாக்குவசீகரங்கள் அமைதித் தீர்வினை நோக்கிய ஒரு அடியைக் கூட எட்டி வைக்க வழிசமைக்காது. இதனை நாம் தேசமாக தெளிவாகவே அறிந்து கொண்டுள்ளோம்.

நேற்றுவரை யுத்த நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற கூற்றுக்கள் இன்று எங்கே போயின? அரசின் பாதுகாப்புக் கவுன்சில் ஒரே நாளில் மேற்கொண்ட தீர்மானத்தின் மூலம் அரசியல் பேச்சுக்கான உண்மையான உகந்த சூழல் ஏற்பட்டு விட்டதாக எம்மையும் உலகத்தையும் நம்பச்சொல்லும் இந்த சூழ்ச்சிக்கு இனி இடமில்லை. இன்னமும் புதிய ஆயுதங்களின் பட்டியல்களை அரசு தயாரித்துக் கொண்டு, அமைதிப் பேச்சுக்கு தயாராவதாக கூறுகின்றது. அவ்வாறு அரசு கூறுவதை உயர்த்திப்பிடித்து முண்டு கொடுத்து நிற்கும் தமிழ் அரசியல்குழுக்கள் சில இன்னமும் இருக்கின்றன. இதோ பேச்சுவார்த்தை நடைபெறப்போவதாக கூறும் அரசு அதற்கான உகந்த நிலைமைகளில் ஒன்றைக் கூட இதயசுத்தியுடன் செய்திருக்கவில்லை. இவ்வாறு செய்யாது, வெறும் வார்த்தை

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

# இந்தியாவின் அகதிகள் கொள்கையும் தமிழீழ அகதிகளும்

இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் அதிகளவில் அகதிகளைக்கொண்ட பிரதேசமாக இந்தியா உள்ளது. திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவான சோவினிச வெறித்தனங்கள், மதவெறி நடவடிக்கைகள், தேசிய ஆக்கிரமிப்பு யுத்தங்கள், ஏகாதிபத்திய உலகமயமாக்கலின் விளைவான பாரிய கட்டுமானங்கள் மற்றும் பெரு நகரங்களின் உருவாக்கம், வரட்சி மற்றும் வறுமை, இயற்கை அனர்த்தங்கள். . . . காரணமாக இந்தியாவிற்குள்ளேயே மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்து வாழ்கின்றனர்.

இவர்களுடன், அண்டை நாடுகளான நேபாளம், பூட்டான், திபெத், பர்மா உட்பட தமிழீழ அகதிகளும் இந்தியாவில் திரண்டுள்ளனர். இந்திய அரசு (அது சார்ந்து மாநில அரசுகளும்) அண்டை நாடுகளிலிருந்து இந்தியாவிற்குள் வரும் அகதிகளுக்காகவும் பிரத்தியேகமான அகதிகள் பிரதேசங்களை உருவாக்கி அவர்களை அமர்த்தி வருகிறது.

தென்னாசியாவில் எந்த ஒரு அரசும் 1951ஆம் ஆண்டின் அகதிகளுக்கான ஐ.நா. சூட்டமர்விலோ அல்லது 1967 உடன்படிக்கையிலோ கைச்சாத்திடவில்லை. தென்னாசியாவின் அதிகாரம்மிக்க வல்லரசாகத் திகழும் இந்தியாவும் இதற்கு விதிவிலக்காயில்லை. அகதிகள்பாதுகாப்பிற்கான தேசிய அளவிலான சட்டங்கள் எதுவும் இந்தியாவிற்குக் கிடையாது. இந்தியாவிற்குள் வந்திடும் வெளிநாட்டு அகதிகளை இந்தியா "சட்ட விரோத குடிவரவாளர்கள்" என்பதாகவே அடையாளங் காண்கிறது. இவ்வாறு "சட்ட விரோதமாக" குடிவரும் அகதிகள் இந்திய கடவுச்சீட்டு சட்டத்திற்கு உட்படுத்தப்பட்டு நடாத்தப்படுகின்றனர். எனவே தமக்கான "சட்ட பூர்வமான ஆவணங்கள்" மற்றும் வீசா பத்திரங்கள் இல்லாதவர்களை தான் விரும்பிய போது வெளியேற்றும் அதிகாரத்தை இந்திய அரசாங்கம் கொண்டுள்ளது.

பொதுவாக இந்திய அரசின் அகதிகள் கொள்கையானது, முற்றிலும் அதன் அரசியல் நலன்களுக்கு உட்பட்டதாக இருக்கிறது. இதற்குற்பட்டுத்தான் இந்திய அரசு அகதிகளுக்கான உரிமைகளைத்தீர்மானிக்கிறது.

இந்த சட்டகத்திலிருந்துதான் தமிழீழ அகதிகளுடனான உறவை இந்திய அரசும் அதனுடன் இணைந்து தமிழக அரசும் தீர்மானிக்கின்றன.

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆயுத பரிணாமத்துடன் எழுச்சி பெற்ற 82 காலப்பகுதியுடன் இந்திய அரசு ஈழத் தமிழ் தேசத்துடனும் சிறிலங்கா அரசுடனும் மேற்கொண்டு வரும் உறவை நாம் பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

1982 - 1987: இக்காலப்பகுதியில் இந்திய அரசு சோவியத் சார்பானதாகவும், சிறிலங்கா அரசு அமெரிக்கா சார்பானதாகவும் இருந்தன. இந்நிலையில், உலக வல்லரசுகளுக் கிடையிலான முரண்பாடுகளை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இவ்விரு அரசுகளும் பிரதிபலித்தன. சிறிலங்கா அரசை தனது பிராந்திய ஆதிகத்திற்கு முரணாக அமெரிக்க வழிகாட்டலில் செயற்படவிடாதிருக்கும் நோக்குடன் இந்தியா செயற்பட்டது. இவ்விரு அரசுகளுக்கிடையிலுமான முரண் உறவு பகிரங்கமாக வெளிப்பட்டது. சிங்கள அரசின் மீது தனது ஆதிக்கத்தை நிறுவுவதற்கான ஒரு கருவியாக ஈழத்தமிழர் தேசிய பிரச்சினையை பயன்படுத்துவதில் இந்திய அரசு தீவிரம் காட்டி வந்தது. போராட்ட அமைப்புகளை வளர்த்து விட்டது. ஈழத்தமிழர்கள் பால் தமிழகத்தில் உருவாகியிருந்த அனுதாப அலையைதனது நீண்டகால பிராந்திய ஆதிக்க அரசியல் நலன்களுக்கு சாதகமாக்கிக் கொள்ளும் வகையில் தமிழீழ அகதிகள் இந்தியாவிற்குள் செல்வதை இந்திய அரசு தனது பக்கத்தில் ஊக்குவித்து வந்தது. தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள தமிழீழ அகதிகளின் எண்ணிக்கையை காரணம் காட்டியும் தனது பிராந்திய அதிகாரத்தைப்பிரயோகித்தும் இந்திய நலன்களுக்குட்பட்ட அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்திக் கொள்ள சிறிலங்கா அரசையும் போராளித் தரப்பையும் அழுத்தி வந்தது. இதன் உச்சமாக இந்திய-இலங்கை ஒப்பந்தம் அமைந்தது.

1987 - 1991: முரண்பாட்டுடன் கூடவே சிங்கள அரசு இந்தியாவிற்கு பணிந்தது. ஈழத்தமிழர் இந்திய ஆக்கிரமிப்பை எதிர்த்து போராடினர். ஈழத்தமிழர் - இந்திய உறவு வெளிப்படையாக பகைமை உறவானது. ஈழத்தமிழரை நேரடியாக நசுக்கும்சக்தியாக இந்தியா மாறியது. இந்நிலையில் சிறிலங்காவில் நடந்த ஆட்சி மாற்றத்தால் பிரேமதாச அதிகாரத்திற்கு வந்ததும் இந்திய - சிறிலங்கா உறவில் மேலும் எதிர்மறை முரண்பாடுகளை தோற்றுவித்தது. 1990இல் இந்தியப் படைகள் வெளியேறுகையில், இலங்கைத்தீவில் அரசியல் நிலைமைகள் இன்னும் சீராகவில்லை என்பதை வெளியுலகிற்குக் காட்டும் வகையில் அகதிகளாக மக்களை வலிந்து அழைத்துச் சென்றதும் குறிப்பிடத் தக்கது.

1991 இற்கு பின்னர்: 80களின் இறுதியில் சோவியத் ஒன்றியம் தகர்கிறது. அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியம் உலகின் ஏக ஆதிக்க சக்தியாக மாறுகிறது. உலகமயமாக்கல் எனும் ஏகாதிபத்திய பொருளாதார கொள்கை "அங்கீகரிக்கப்பட்டதாக" வியாபிக்கத் தொடங்குகிறது. இதன் பாதிப்புகளுக்கு இந்தியாவும் உள்ளாகிறது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்திய ஆதிக்கத்தை தக்கவைத்துக் கொள்வதில் தனக்கான தனித்துவமான நலன்களை இந்தியா கொண்டிருக்கும் அதேநேரம், ஏகாதிபத்திய பொருளாதார நலன் சார்ந்து இந்திய - சிறிலங்கா அரசுகளுக்கிடையிலான உறவுகள் ஒத்ததன்மையுடையனவாக மாறும் காலப்பகுதியாக இது உள்ளது.

மறுபுறம், விடுதலை புலிகள் சிங்கள அரசுடன் மூன்றாம் கட்ட ஈழப் போரைப்பிரகடனப்படுத்திக்கொண்டு மண்மீட்புப் போராட்டத்தில் முன்னேறியது. தமிழீழ விடுதலைப் போராட்டம் முற்றிலும் சுயாதீனமான போராட்டமாக பரிணமிக்கத் தொடங்கியதுயாவும் இச்சக்திகளை அச்சுறுத்தத் தொடங்கியது. இந்நிலைமைகளின் கீழ், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதில் தமக்கிடையிலான தனித்துவமானதும் பொதுவானதுமான நலன்களின் அடிப்படையில் இந்திய - சிறிலங்கா அரசுகள் பரஸ்பர ஒத்துழைப்புடன் செயற்படத் தொடங்கின. 1991 சார்க் மாநாட்டின் பின்னர் இந்திய சிறிலங்கா அரசுகளுக்கிடையில் பரஸ்பர ஒத்துழைப்பு உடன்படிக்கை உருவாக்கப்பட்டது. இதன் பிரதிபலிப்பாக 1992இல் தமிழீழ அகதிகள் சில ஆயிரம் பேர் விருப்பத்திற்கு மாறாக இந்திய, தமிழக அரசுகளினால் திருப்பியனுப்பப்பட்டனர்.

1995 இற்கு பின்னர்: சிறிலங்காவில் சந்திரிகா தலைமையிலான பொதுஜன முன்னணி சிங்கள தேசத்தை மேலும் சிறப்பாக ஒருங்கிணைத்து ஆட்சி அமைக்கிறது. ஏகாதிபத்திய முகாமுடன் சந்திரிகா அரசாங்கம் நெருக்கமான உறவுகளை புதிய தளங்களில் ஏற்படுத்திக் கொள்கிறது. இந்திய பொருளாதார முறைமை மேலும் உலகமயமாதல் நோக்கி நகர்கிறது. இதன் கீழ் இந்திய தரகு முதலாளித்துவ மூலதனம் சிறிலங்காவில், குறிப்பாக, மலையக பெருந்தோட்டங்களில் முதலிடப்பட்டு இரு அரசுகளுக்குமிடையிலான பொருளாதார உறவுகள் பலம் பெறுகின்றன. இரு நாடுகளினதும் ஆளுங்குழுமங்களின் நலன்கள் மேலும் ஒன்றையொன்று பிராந்திய வகைப்பட்டு பலப்படுத்தும் தேவை அதிகரிக்கிறது. முரண்பாடுகள் இருப்பினும், இந்தியாவின் "பிராந்திய ஆதிக்க" தனித்துவத்தை அங்கீகரித்துக் கொண்டு செல்லும் இணக்கப்போக்கை சிறிலங்கா மேற்கொள்கிறது. (ஏகாதிபத்திய பொருளாதார விஸ்தரிப்பை இந்தியா தன்னளவில் நடைமுறைப்படுத்தி வருவதால் இந்தியாவின் இந்து சமுத்திர பிராந்தியத்திலான ஆதிக்கத்தை இன்று ஏகாதிபத்திய முகாமும் அங்கீகரித்து அதற்கேற்ப செயற்படுவதும் கவனிக்கத்தக்கது) சிறிலங்கா அரசிற்கு இராணுவ, பொருளாதார, அரசியல் உதவிகளை வழங்கும் உடனடி காப்பாளராக இந்தியாவும் தீவிரமாக செயற்படத் தொடங்குகிறது.

சிறிலங்காவை தனது நேசநாடாக இந்தியா பகிரங்கமாக பிரகடனப்படுத்தி செயற்பட்டு வருகிறது. இக்கொள்கை நிலைப்பட்டு, சிங்கள அரசின் தமிழீழத்தின் மீதான தேசிய அடக்குமுறைக்கு துணைபோகும், அதை பாதுகாக்கும் காரியத்தை இந்தியாவிற்குள்ளும் சர்வதேச அளவிலும் "திறம்பட" மேற்கொண்டு வருகிறது.

இந்தியாவின் பிராந்திய மற்றும் உள்நாட்டு அரசியல் நிலைமைகளை மையப்படுத்தி (தமிழீழம் 23வது இதழில் இது சார்ந்து நாம் விரிவாக உரையாடியுள்ளோம்) 1990களின் பின்னரான அகதிகளை இந்திய அரசு முற்றிலும் எதிர்மறை பண்பில் அணுகி வருகிறது.

இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள நேபாளம், திபெத் அகதிகள் தமது அரசியல் நோக்கங்களை

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## இந்தியாவின்...(6ம் பக்க..

பிரச்சாரப்படுத்துவதற்கும், பகிரங்க வெகுஜன நடவடிக்கைகளில்ஈடுபடுவதற்குமான உரிமைகளை அளித்துள்ளது. இத்தேசங்களைச் சார்ந்த மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்குகிறது. ஆனால்ஈழ அகதிகளை இரும்புக்கரம் கொண்டு நசுக்குகிறது. ஈழ அகதிகள் தமது அரசியல் உணர்வுகளை அடிப்படையில் வெளிப்படுத்த முடியாத, குறைந்த பட்சம் தம்மை ஈழத் தமிழர் என அறிமுகப்படுத்திக் கொள்ள முடியாத இறுக்கமான சூழலை இந்திய அரசும் அதனோடிணைந்து தமிழக மாநில அரசும் உருவாக்கியுள்ளன.

இதற்காக தமிழீழ விடுதலைப்போராட்டம்சார்ந்து மிகவும் பயப்பிராந்தியூட்டும் எதிர்மறைப் பிரச்சாரங்களை இந்திய ஆளுங்குழுமத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஊடகங்கள் திட்டமிட்டு மேற்கொண்டு வருகின்றன. இதன் மூலமாக, தமிழக மக்களை ஈழத்தமிழரிடமிருந்து அந்நியப்படுத்துவதில் குறுகிய கால வெற்றியையும் ஈட்டியுள்ளன.

இப்படியாக, தமிழீழ அகதிகள் சார்ந்து இந்திய அரசு கொண்டிருக்கும் அடக்குமுறை நிலைப்பாடு தொடர்பாக நமது தேச அரசியலில் மேலும் தெளிவான பார்வைகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதுடன் நமது மக்களையும் அதையொட்டி விழிப்புணர்வூட்ட வேண்டிய கடப்பாடு போராட்டசக்திகளது தோள் சார்ந்ததாகும்.

♦ சுபத்திரா

## பேச்சுவார்த்தை....

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ஜாலங்களின் பின்னே நமது மக்கள் மயங்கி நிற்பர் என அரசு எதிர்பார்க்கின்றது. தேசிய முரண்பாட்டின் முதற்புள்ளியைக் கூட இன்னும் சிங்கள ஆளுங்குழுமம் சரியாகப் பற்றிக் கொள்ளவில்லை என்பதையே இப்போக்கு மறுபடியும் நிரூபிக்கின்றது.

அரசியல் பேச்சுக்களுக்கான சூழலை உருவாக்குதல் என்ற வகையில், தெட்டத் தெளிவான யுத்தநிறுத்தம், அதனை பிசகின்றிக் கடைப்பிடித்தல், பொருளாதார தடையை முற்றாக நீக்குதல், விடுதலைப் புலிகளின் மீதான தடை நீக்கம், ஆயுதங்கள் வாங்கிக் குவிப்பதை நிறுத்தல், இன்னும் ஆளணிகள் திரட்டுதலை நிறுத்தல், அவதூறுகளையும் பொய்ப் பிரச்சாரங்களையும் நிறுத்துதல், நமது மக்கள் மீதான அனைத்து அடக்குமுறைச் செயற்பாடுகளையும் நிறுத்தல், ஏற்கனவே உடன்பட்ட விடயங்களை ஒன்று விடாது நிறைவேற்றுதல் இப்படி இன்னோரன்ன காரியங்களை எந்தவித சந்தேகத்திற்கும் இடமின்றி அரசு நிறைவேற்ற வேண்டும். எதிரிகளின் நிறுவனங்கள் மேலிருந்து கீழ் வரை இக்கடப்பாடுகளை நிறைவு செய்யாது, சமாதான தீர்விற்கு தயார் என்பதாக கூறும் அரசின் புரட்டல்களை நம்புவதற்கு, சர்வதேச மூகத்திலும் நமது தேசத்திலும் இன்று எவருமில்லை. தமது வரலாறு முழுவதும் சந்தர்ப்பவாதம் என்ற சாதனைகளைத் தவிர, வேறு எதனையும் அறியாத தமிழ்த் தரப்பிலுள்ள ஓரிரு அரசியல் கோமாளிகளைத் தவிர.

## சிறுவர்கள்...(4ம் பக்கம்)

ரத்தை தாங்குவதில் நமது சிறுவர்களும் பங்காற்றுகிறார்கள். தம்மாலான அனைத்து வகைப்பட்ட தொழில்களிலும் நமது சிறுவர்கள் ஈடுபடுகிறார்கள். உழைப்புச் சரண்டலுக்கு உள்ளாகிறார்கள். விவசாய, கடற்றொழிலாள மற்றும் தொழிலாள குடும்பங்களைச் சார் சிறுவர்கள் பாடசாலை நேரம் போக மீதி நேரங்களில் தம்பெற்றோருடன் இணைந்து உழைப்பில் ஈடுபடுவது நம் தேசத்தில் பொதுவழக்கமாய் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மறுபுறம், நமது சமூகத்தின் அகவாழ்வில் நமது சிறுவர்கள் மோசமான அடக்குமுறைகளை எதிர்கொண்டு வருவது ஒரு குறிப்பான சமூகப் பிரச்சனையாக இன்னும் பரந்தளவில் இனங் காணப் படாதிருந்து வருகிறது.

நமது சமூகத்திலும் அதன் காரணமாக குடும்பங்களிலும் வயது வகைப்பட்டு அதிகாரத்துவமான உறவுநிலவுவதால், பொதுவாகவே சிறுவர்கள் நமது தேசத்தில் உரிய கௌரவத்துடனும் முக்கியத்துவத்துடனும் நடாத்தப்படுவதில்லை. சிறுவர்களை உடல்- உள ரீதியாக தண்டிப்பதை ஒரு ஜுநியாயமானஜி சிறுவர் வளர்ப்பு முறையாகவே நமது சமூகம் காண்கிறது.

யுத்தத்தின் விளைவாக சமூகஅளவில் ஏற்பட்டிருக்கும் சீர்குலைவினால், சமூக விரோத நடவடிக்கைகள் உள்ளார்ந்து அதிகரித்து வருகின்றன. இதன் ஒரு பகுதியாக சிறுவர் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள், வன்முறைகள், சித்திரவதைகள் சொந்த குடும்ப உறுப்பினர்களாலும் அயலவர்களாலும் மேற்கொள்ளப்படுவது அதிகரித்துள்ளது.

தேசிய அடக்குமுறை அட்டூழியங்களையும் சமூக ஆதிக்க போக்கினாலான அடக்குமுறைகளையும் ஒருங்கே எதிர்கொண்டு வரும் நம் தேசத்து சிறுவர்களின் சமூக அளவிலான பிரச்சனையானது உரிய முக்கியத்துவத்துடன் தீர்க்கப்பட வேண்டிய விடயமாகும்.

சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சார்ந்து தற்போதிருந்தே போராட்ட சக்திகளும் சமூக செயற்பாட்டாளர்களும் சமூகத்தில் பரந்தளவிலான விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும். சிறுவர்கள் சார்ந்து சமூகத்தில் உருவாகிடும் விழிப்புணர்வே அவர்களை அடிப்படையில் பாதுகாப்பதாகும்.

அமையப் பெறும் தமிழீழ குடியரசானது நம் தேசத்தின் எதிர்காலமாகத்திகழும் நம் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்பதையும் அவர்களின் அடிப்படை நலன்களை பூர்த்தி செய்வதையும் உறுதிப்படுத்திட வேண்டும். ஐ.நா. சிறுவர் உரிமை சாசனத்தை தமிழீழத்தில் நடைமுறைப் படுத்துவதற்கான அடித்தளத்தை ஸ்தாபித்திட வேண்டும்.

இதன் மூலம் தான் யுத்த நெருப்பில் போராடிக்கொண்டும் தேசத்திற்காக தம் பிஞ்சு உயிர்களை அர்ப்பணித்துக் கொண்டும் இருக்கும் நம் சிறுவர்களுக்கு நாம் தேசமாக செய்யும் உயரிய கௌரவமாகும்.

♦ அங்கவை

## மக்கள் களம்

உங்களது கட்சியின் கோட்பாட்டுக் கருத்துக்களையும், அதேநேரத்தில் தமிழீழம் பத்திரிகையில் வரும் அரசியல் கருத்துக்களையும் மேலோட்டமாக வாசிக்கும் ஒருவருக்கு, இரண்டும் முரண்பட்டு நிற்பது போல தோன்றக் கூடும். ஆரம்பத்தில் எனக்கும் அவ்வாறாகவே பட்டது. ஆனால், ஒரு ஆழ்ந்த தொடர்ச்சியான வாசிப்பை இரு தளத்திலும் மறுபடியும் செய்தபோதுதான் உங்களின் கோட்பாட்டு நிலைப்பாடுகளுக்கும் அரசியல் நிலைப்பாடுகளுக்கும் இடையில் காணப்படுகின்ற ஒரு வித இசைவான உறவை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

இப்படிக்கு
அர்ச்சுதன்.
வவுனியா

அன்புடையீர்,

உங்கள் பத்திரிகையானது தேசியத் தளத்தில் அதனை உறுதியாக முன்னெடுக்கின்ற விடயத்தில் கணிசமான பங்களிப்பினைச் செய்து வருகின்றது. இதனை எவரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால், பிரதான விடுதலைப் போராட்ட சக்திக்கும், அதன் பகுதியில் உள்ள மக்களுக்கும் இடையில் காணப்பட்டு வரும் முரண்பாடுகளில் அதிகம் கவனம் செலுத்துவதாக இல்லை. இவ்வாறாக மக்கள் மத்தியிலுள்ள சில கசப்புணர்கள், எப்படியோ அதேவிடுதலைப் போராட்டத்தை உள்ளிருந்து பலப்படுத்தும் நிலையில், ஒரு பலவீனத்தை ஏற்படுத்தவில்லையா? போராட்டத்தை உள்ளிருந்து அரிக்கும் ஒரு தீய முரண்பாடு என்பதும், இதனை நாம் அப்படியே அமுக்கிவைத்திருப்பது நீண்டகாலத்தில் நமது போராட்டத்தையே பாதிக்கும் என நீங்கள் கருதவில்லையா? நிச்சயம் நான் அப்படித்தான் கருதுகின்றேன்.

அன்புடன்,
பெரியசிவம்
மன்னார்.

அன்புடையீர்,
நான் தமிழீழம் சஞ்சிகையை வாசித்து வருகிறேன். இலங்கை மற்றும் தமிழீழ சமகால அரசியல் நிலவரங்களையும், எதிர்கால நடவடிக்கைகளையும் முன்கூட்டியே படம்பிடித்துக் காட்டும் அருமையானதொரு சஞ்சிகை. தொடர்ந்தும் வெளிவர எனது வாழ்த்துகள்.

சிவதாசன்
வலை தகவல

தமிழீழம்

www.thamileelam.org
info@thamileelam.org

'The Editor'
BM Box 4002
London. WC1N 3XX
United Kingdom

# விடுதலை யுத்தத்தால் அரசியலைப் பலப்படுத்துவோம்! அரசியலால் போராட்டத்தைப் பலப்படுத்துவோம்

அக்கினி சுவாலை முறியடிப்பு வெற்றியானது நமது தேசத்திற்கு கூடுதல் அரசியல் பலத்தை சேர்ப்பதாயும், இன்றைய நிலையில் நமது தேசத்தின் கோரிக்கைகளை மிகப்பலமான நிலையில் நின்று முன்வைக்கக் கூடிய நிலையையும் தோற்றுவித்துள்ளது.

நாம் தேசமாக வந்தடைந்திருக்கும் அரசியல் வெற்றிகளை மேலும் பலப்படுத்தி இலக்கு நோக்கி வளர்த்துச் செல்வதே நமது குறிக்கோள். நமது தேசம் ஈட்டிவரும் இராணுவ வெற்றிகள் நமது அரசியல் வெற்றிகளுக்கு அடித்தளமாயிருந்து வருகின்றன. அவ்வகையில் இராணுவ வெற்றிகளால் அரசியலைப் பலப்படுத்தும் வழிமுறையை தற்பொழுது நமது தேசத்தின் தெரிவாகக் கொள்வோம். நமது விடுதலை யுத்தத்தை தடையின்றி தீவிரமாக முன்னெடுத்துச் செல்வோம்.

சிங்கள அரசு தனது பொருளாதார, இராணுவ பலவீன நிலையில் பேச்சுவார்த்தைகளுக்கு வர வேண்டும் என சர்வதேச ஆதிக்க சக்திகளின் துணையுடன் நமது தேசத்தின் மீது மீளவும் அழுத்தம் செலுத்த முனைகிறது. பேச்சுவார்த்தை பற்றி எப்பொழுதெல்லாம் சிங்கள அரசு தானாக கதைக்கத் தொடங்குகிறதோ அச்சந்தர்ப்பங்களில் அகத்தே அதன் பொருளாதார, இராணுவ காரணிகளும் ஆளுந் தரப்பின் அரசியல் நிலைமைகளும் வீழ்ச்சி நிலையில் இருப்பதென்பதே உண்மை. இதுவே இதுவரை காலமும் நமது மக்கள் கண்டுவந்த அனுபவமாகும்.

நமது தேசத்தின் பக்கத்திலான சமாதான நல்லெண்ண நிலைப்பாட்டை நாம் ஏற்கனவே இம்முறைமட்டுமல்ல பலமுறை நடைமுறையில் நிரூபித்திருக்கிறோம். ஆனால் அதைப் புறக்கணித்துவிட்ட சிங்கள அரசு தற்போது மீள சமாதான பேச்சுவார்த்தை என்கிறது. தனது நோக்கில் சிங்கள அரசு உண்மையாக இருக்குமானால் பேச்சுவார்த்தைகளுக்கான சாதகமான சூழலை ஏற்படுத்துவதை அரசு தனது பக்கத்தில் நடைமுறையில் நிரூபிக்க வேண்டும். இதற்கான முழுப் பொறுப்பும் அரசையே சாரும்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இனிமேலும் சமாதானம் என்பது சிங்கள தேசத்திற்கும், தமிழீழத்திற்கு மானதாகவே இருக்கும் என்பதில் எள்ளளவு விட்டுக்கொடுப்பும் நமது மக்கள் மத்தியில் ஏற்படவில்லை. அண்மைக்கால அரசினதும், சர்வதேச ஆதிக்க சக்திகளதும் நடவடிக்கைகள் அனைத்தும் நமது இந்நிலையை பலப்படுத்தினவே தவிர மாறாக, அவர்கள் கொண்டுவரும் சமாதானத்திற்கான நாட்டத்தை நம்மக்களிடமிருந்து இம்மியளவேனும் பெறவில்லை.

எமது தொடர் போராட்டம் மூலம் சிறிலங்கா அரசை பொருளாதார ரீதியிலும், மற்றும் பல்வேறு நெருக்கடிக்குள்ளும் வீழ்த்தியிருக்கும் நாம் எமக்கு கிடைத்துவரும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் நமது தேசத்திற்கு சாதகமாகவே பயன்படுத்த வேண்டும். அதிலும் குறிப்பாக, நமது அரசியற் பிரச்சினை மீதான இனவெறி சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளின் இது வரைகால அனுபவங்களின் பிற்பாடும் அவர்கள் நம்மைப் பயன்படுத்த முனையும் ஒவ்வொரு செயற்பாடுகளையும் நமது தேசத்தை பலப்படுத்துவதற்கான வெற்றிகளாக நாம் உருவாக்க வேண்டும்.

சிறிலங்கா ஆட்சிக்கட்டமைப்பிற்கு தலைமை தாங்கும் கட்சி நீலமாயினும் பச்சையாயினும் இரண்டுமே இனவெறிமிக்கன என்பதையும் நமது தேசத்தின் இறைமையை நசுக்குவன என்பதையும் நமது மக்கள் அறிவார்கள். எனினும் சிறிலங்கா அரசானது பலவீனமானதாகவும் நிலையற்றதாகவும் இருப்பது நமது தேசத்திற்கு பல்வேறு வழிகளிலும் சாதகமானதே. பலவீனமானதும் நிலையற்றதுமான அரசின் மீது பலமான நிலையில் நின்று நம்மால் நமது கோரிக்கைகளை மேலும் ஆணித்தரமாக முன்வைக்க முடியும்.

இந்த வகையில் இன்று நடக்கும் ஆதிக்க சக்திகளின் நகர்வுகளில் சிறிலங்கா பாராளுமன்றத்தின் அங்கம் வகிக்கும் தமிழ் அரசியல் தரப்பினர் நமது தேசத்திற்கு சார்பான நிலைப்பாட்டையே எப்பொழுதும் சிங்கள பாராளுமன்றத்தில் வெளிப்படுத்த வேண்டும். கடந்த காலத்தில் புலிகள் மீதான பிரித்தானிய தடை ஏற்பாடுகளின் போது துரோகிகளை தவிர அனைத்து தமிழ் கட்சிகளும் தேசத்தின் சார்பில் ஓரணியில் நின்றது குறிப்பிடத்தக்கது. தேசத்தின் வெளிப்படையான நலன்களின் போது மாத்திரமல்ல மறைமுகமான நலன்களுக்கான அரசியல் நிலைப்பாடுகளை மேற்கொள்கையிலும் இத் தமிழ் அமைப்புகள் தேசத்தின் நலனை முதன்மைப்படுத்தி ஓரணியில் நிற்பது அவசியமாகும்.

மாவனெல்ல பிரதேசத்தில் முஸ்லிம் மக்கள் மீது சிங்கள இனவெறி திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் மீதான சிங்கள இனவெறித் தாக்குதல் காலத்திற்குக் காலம் நடைபெற்று வந்திருப்பதுடன் தற்பொழுது இது மேலும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் மேற்கொள்ளப் பட்டிருப்பதையே மாவனெல்ல சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன.

சிங்கள இனவெறி பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கு ஈழத்தமிழ், முஸ்லிம், மலையக தமிழ் தேசங்கள் பொது வேலைத் திட்டத்தின் கீழ் ஓரணி திரள வேண்டிய வரலாற்றுத் தேவை உருவாகியுள்ளது. தமக்கேயான தனித்துவமான தேசிய நலன்களைக் கொண்டுள்ள அடக்கப்பட்ட தேசங்கள் இனவெறி முறியடிப்பு எனும் தமது பொது நலனில் நின்று சிங்கள அரசை பலவீனப்படுத்தவும், சகதேசங்களின் கோரிக்கைகளுக்கு அரசைக் கட்டுப்படச் செய்யவுமாக தமக்கிடையே உறுதியான பரஸ்பர புரிந்துணர்வை கட்டியெழுப்ப வேண்டும்.

இது நோக்கி விடுதலைப் புலிகள் அடங்கலாக அடக்கப்பட்ட தேசங்களின் அரசியல் தலைமைகள் செயற்படுவதும், மக்களுக்கு அரசியல் வழிகாட்டல் செய்வதும் இன்றைய தேவையாயுள்ளது.

எதிரியின் மீது நமது அரசியல் வெற்றியினை தொடர்ச்சியாக நிறுவ வேண்டுமாயின் நமது தேசத்தின் அகத்தேயும் புதிய பண்புகள் பரிணமிக்க வேண்டும். மாற்றுக் கருத்துகள், அரசியல் அமைப்புகளது இருத்தல் மற்றும் செயற்பாடு அங்கீகரிக்கப்பட வேண்டும். அனைவரும் தேசத்திற்கான தமது கடமைகளை தத்தம் தனித்துவங்களுடன் மேற்கொள்வதற்கான ஜனநாயக சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

மாற்றுக் கருத்துகளின் பாலான சகிப்புணர்வும், பல்வேறு அரசியல் சக்திகளினதும் கூட்டுச் செயற்பாடுமே நமது விடுதலைப் பயணத்தை சரியான தடயத்தில் இட்டுச் செல்லும்.

வட அமெரிக்கத் தொடர்புகட்கு:
300 Borough Dr.,
PO Box 47032
Scarborough, On.
M1P 4Z P
Canada

ஐரோப்பியத் தொடர்புகட்கு:
'The Editor'
BM BOX 6769
LONDON
WC1 3XX, U.K.
Tel: 07041372064